**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

**OS. No. 147/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | வில்சன் | ஊர் | : | தஞ்சாவூர் |
| க.பெ/ த.பெ. | : | **மரியதாஸ்** | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 57 | தொழில் | : | **சுயதொழில்** |

2025ம் ஆண்டு ஜுன் திங்கள் 23-ஆம் நாள் **பி.சா.1ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இத்துடன் கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 08.08.2002 ஆம் தேதியிட்ட வரவு ரசீதின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1**. 03.10.2002 தேதியிட்ட கடன் விண்ணப்பத்தின் அசல் **பி.சா.ஆ.2** (மேற்படி ஆவணம் வங்கி வசம் தான் இருக்கும் என்றும் எனவே இது உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என தெரிவித்து வாதி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு ஆவணம் குறியீடப்படுகிறது). 10.10.2002 தேதியிட்ட அடமான கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.3**. 06.01.2004 தேதியிட்ட பெந்தக வரவு ரசீதின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.4**. எனது தகப்பனாரின் சம்பள பட்டியல் ஜெராக்ஸ் நகல் **பி.சா.ஆ.5**. எனது பாஸ்போர்ட்டின் நகல் **பி.சா.ஆ.6**.(அசலுடன் ஒப்பிடப்பட்டு நகல் குறியீடப்படுகிறது.) புதுமனை புகுவிழா அழைப்பிதழ் அசல் **பி.சா.ஆ.7**.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- V.S.குமரேசன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**